ஒரு கிராமத்தில் மக்களிடத்தில் இந்த நோய் அதிகமாக பரவி யிருக்கிறது என்றால், அது மாவட்ட டி.பி. ஆபீசருக்குத் தெரி விக்கப்படுமானால், அந்தப் பகுதியில் அதிகக் கவனம் செலுத்தி பல் வேறு பணிகள் செய்ய வழி செய்யப்படும்.

கோவை மாவட்டத்திலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள்

*** 74—வினா. திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம் E.S.I. தலைமை ஆஸ்பத்திரியில் (சிங்காநல்லூர் வரதராஜ புரத்தில்) ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் எழுதித்தரும் மருந்துகளை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் அங்கத்தினர் கூறும் வகையில் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் கோயமுத்தூர் E.S.I. மருந்துவமனையில் உள்ளிருந்து மருத்துவ சிகிச்சை பெறும் பிணியாளர்களுக்கு மருத்துவமனை யிலிருந்தே தேவையான ஸ்பெஷலிஸ்ட் மருந்துகள் வழங்கப் படுகின்றன. வெளியில் இருந்துகொண்டு மருத்துவம் பெறும் பிணியாளர்களுக்கு வல்லுநர்கள் கூறும் மருந்துகள் அந்த அந்த மருந்தகங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவையில் ஈ.எஸ்.ஐ மருந்தகங்களில் டாக்டர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்துகள் கிடைக்காத குறைபாடு இருக்கிறது. ஆகவே, அந்தக் குறை பாட்டைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அது பற்றி பரிசீலிக்கப்படும்.

*** 75 வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் E.S.I. தலைமை ஆஸ்பத்திரியில் (சிங்காநல்லூர் வரதராஜபுரத்தில்) எலும்பு முறிவு கவனிக்கும் பிரிவில் நிரந்தரமாக ஸ்பெஷலிஸ்ட் டாக்டரை நியமிக்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவார்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) கோயம் புத்தூர் E.S.I. மருத்துவமனையில் எலும்பு முறிவு (Orthopaedics) கவனிக்கும் பிரிவில், மருத்துவவல்லுநர் (நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2—11—1971 அன்று மருத்துவமனையில் பணியேற்றுள்ளார்.